கூடுதல் மாவட்ட (விரைவு) நீதிமன்றம், தேனி.
முன்னிலை– திருமதி. G.ஸ்ரீதேவி, B.A., L.L.M.,
கூடுதல் மாவட்ட நீதிபதி,

2026 ம் ஆண்டு மார்ச் திங்கள் 17 ம் நாள் செவ்வாய்கிழமை
Counter Claim in O.S.No.51/2018

P.சுபரக்ஷணா ...வாதி

/எதிர்/

1. P.முத்துலு
2. M.மாலா
3. M.நித்யா
4. சார்பதிவாளர், கம்பம்
5. தேனி மாவட்ட ஆட்சியர், தேனி ... 1 முதல் 5 பிரதிவாதிகள்

இவ்வழக்கு என் முன்னர் 17.03.2026 அன்று விசாரணைக்கு வந்தபோது வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.J.மாதேஷ் அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.M.சுப்பிரமணியன் அவர்கள் ஆஜராகியும், வழக்கு சாட்சி விசாரணைக்காக வாய்தா ஏற்பட்டிருந்த நிலையில், வாதிக்கு போதிய காலஅவகாசம் வழங்கப்பட்டும், வாதி தரப்பில் அழைத்தும் ஆஜரின்மையாலும், எந்த எடுத்துரைப்பும் இல்லாததாலும் வாதிகளின் வருகையின்மை காரணமாக இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்...

**<u>தீர்ப்புரை</u>**

கடந்த 02.01.2008–ம் தேதி வாதி மற்றும் 1–ம் பிரதிவாதி கார்டியன் ஸ்தானத்திலிருந்த தனது தாயார் திருமதி.சசிரேகா மூலம், 2–ம் பிரதிவாதி ஆகியோர்கள் கூட்டாக சேர்ந்து 3–ம் பிரதிவாதியின் நலனுக்கெதிராக, 4 ம் பிரதிவாதி அலுவலகத்தில் மோசடியாக தயார் செய்து பதிவு செய்யப்பட்ட பாகப்பத்திர ஆவணம்: 2/2008–ஐ ரத்து செய்தும், தாவா பிராது சொத்துக்களை பொறுத்து அதன் மதிப்பு, தன்மை ஆகிய அம்சங்களை கருத்தில் கொண்டு மூன்றில் ஒரு பாகமாக நயமிட பிரித்து ஒரு பாகத்தை (1/3) 3–ம் பிரதிவாதியின் வசம் தனித்த சுவாதீனம் ஒப்படைக்கும் படி பாகப்பிரிவினை பரிகாரம் முதல்நிலை தீர்ப்பாணை வழங்கியும், அதனை தொடர்ந்து இறுதி நிலை தீர்ப்பாணை வழங்கியும், பிராது சொத்துக்களில் 3–ம் பிரதிவாதிக்குரிய 1/3 பாகத்தினை நயமிடர் பிரித்து தனித்து சுவாதீனம் பெறும்வரை இந்தநிர் வாதியோ மற்றும் 1–ம் பிரதிவாதியோ அவரது வகையாட்களோ, ஏஜெண்டுகளோ மூன்றாம் நபருடன் சேர்ந்து பிராது சொத்துக்களை பொறுத்து ஒத்தி, ஈடு, கிரையம் போன்ற

பந்தக பராதீனங்களுக்கு உட்படுத்தக் கூடாது என ஒரு நிரந்தரநிலை உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கியும், பிராது சொத்துக்களில் 3–ம் பிரதிவாதிக்கு உரிய (1/3) மூன்றில் ஒரு பாகத்தை நயமிடர் பிரித்து தனித்து சுவாதீனம் பெறும்வரை பிராது சொத்துக்களைப் பொறுத்து இந்நிர் 1ம் பிரதிவாதியோ, வாதியோ அவரது வகையாட்களோ, ஏஜெண்டுகளோ மூன்றாம் நபருடன் சேர்ந்து ஒத்தி, ஈடு கிரையம் போன்ற பந்தக பராதீனங்களுக்கு உட்படுத்தும் ஆவணங்களை எழுதி 4ம் பிரதிவாதியின் அலுவலகத்தில் பதிவிற்காக தாக்கல் செய்தால் அதை 4ம் பிரதிவாதி பதிவு செய்யக்கூடாது என ஒரு நிரந்தரநிலை உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கியும், இந்த எதிர்கோரிக்கை வழக்கின் செலவு தொகையை 3–பிரதிவாதிக்கு, வாதி மற்றும் 1, 2–ம் பிரதிவாதிகள் செலுத்த வேண்டுமென உத்தரவிட்டும், இந்த வழக்கின் தன்மைக்கேற்ப இந்நீதிமன்றம் கருதும் இதர பரிகாரங்களை வழங்கியும் உத்தரவிடுமாறு வாதியால் எதிர்கோருரிமை வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

No representation for Counter Claimant till 5.00 p.m. Counter claimant called absent. Sufficient opportunity given. Inspite of which Trial not commenced. Hence in the interest of Justice and considering the long pendency of the case without any progress this counter claim is dismissed for non prosecution. No costs.

இத்தீர்ப்புரையானது 2026ம் ஆண்டு மார்ச் மாதம் 17–ம் நாள் செவ்வாய்கிழமை இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

G SREE DEVI
Digitally signed by G SREE DEVI
Date: 2026.03.17 18:38:01 +0530

**கூடுதல் மாவட்ட நீதிபதி,**
**தேனி.**
**17.03.2026**